Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

SEPTEMBER 24, 2024

செவ்வாய்க்கிழமை செப்டெம்பர் 24, 2024 | ஒளி: 10 கதிர்: 057 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## புதிய செயலாளர்கள் நியமனம்




பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன, புதிய பாதுகாப்புச் செயலாளராக எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு) சம்பத் துயகொண்டா ஆகியோர் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதியின் செயலாளர் நியமனம்



ஜனாதிபதியின் செயலாளராக சனத் நந்திக குமாநாயக்க, ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார். சனத் நந்திக குமாநாயக்க களனி பல்கலைக்கழகத்தின் பட்டதாரி ஆவார்.

## சபாநாயகர் வாழ்த்து



இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒன்பதாவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அனுரகுமார திஸாநாயக்கவிற்கு தனது வாழ்த்துக்களை தெரிவிப்பதாக பாராளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன உத்தியோகபூர்வ வாழ்த்துச் செய்தியூடாக தெரிவித்துள்ளார்.

## மைத்திரி அதிரடி அறிவிப்பு




எந்தவொரு தேர்தலிலும் தான் இனிமேல் போட்டியிடப்போவதில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றவருக்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

தேர்தலில் களமிறங்காவிட்டாலும் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு உத்தேசித்துள்ளதாகவும் மைத்திரிபால சிறிசேன மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## பிரதமர் இராஜினாமா



பிரதமர் தினேஷ் குணவர்தன திங்கட்கிழமை (23) இராஜினாமா செய்து, தனது இராஜினாமா கடிதத்தை, புதிய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்ததை அடுத்தே, அமைச்சரவை கலைந்தது.

## மத்திய மாகாண ஆளுநர் இராஜினாமா



மத்திய மாகாண ஆளுநரின் சட்டத்தரணி லலித் யு கமகே, ஆளுநர் பதவியிலிருந்து விலகுவதற்கான கடிதத்தை சமர்ப்பித்துள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் அலுவலகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாணம் மற்றும் கண்டியின் அனைத்து அம்சங்களிலும் சிறப்பு அறிவும் அனுபவமும் கொண்ட கண்டியில் வசிக்கும் மூத்த அரசியல்வாதிகள் இருவரில் ஒருவர் மத்திய மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட வாய்ப்புள்ளதாக மிகவும் நம்பகமான அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## வினாத்தாள் கசிவு: பணிப்பாளர் கைது

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் வினாக்கள் வெளியாகிய சம்பவம் தொடர்பில் மஹரகமவில் உள்ள தேசிய கல்வி நிறுவகத்தின் திட்டமிடல் பிரிவின் பணிப்பாளர் ஒருவர் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரினால் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் சில வினாக்கள் வெளியாகியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. 57 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.



# “பொறுப்பினை ஈடேற்றுவேன்”

### பதவிப்பிரமாண விழாவில் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் என்னிடம் ஒரு தலையாய பொறுப்பு இருப்பதாக நான் நம்புவதோடு இந்த சவாலை வென்றெடுப்பதற்காக எல்லாச் சந்தர்ப்பங்களிலும் செயலாற்றுவதற்காக என்னிடம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்பினை நான் முறைப்படி ஈடேற்றுவேன் என்பதை இந்த சமூகத்திற்கு நிரூபித்துக் காட்டுவேன் என்று புதிய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

செப்டெம்பர் 21ஆம் திகதியன்று நடைபெற்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டிய தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அனுரகுமார திஸாநாயக்க, பிரதமர நீதியரசர் ஜயந்த ஜெயசூரிய முன்னிலையில், ஜனாதிபதி செயலகத்தில் வைத்து, திங்கட்கிழமை(23) பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

மிகவும் எளிமையான முறையில் நடைபெற்ற இந்த பதவிப்பிரமாண வைபவத்தில், மத தலைவர்கள் ஆசீர்வாதம் வழங்கினர். பதவிப்பிரமாணத்தின் பின்னர் உரையாற்றும் போதே, ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர், தொடர்ந்து உரையாற்றுகையில்

எமது நாட்டின் சனநாயகத்தின் மிக முக்கியமான பண்பு மக்களால் தம்மை ஆள்வதற்கான ஆட்சியாளரை தெரிவு செய்து கொள்வதே என்பது எங்களுக்கு தெரியும். எனினும் தேர்தலின்போது வாக்குகளை அளித்தல் மற்றும் ஆட்சியாளரை தெரிவு செய்து கொள்வதால் மாத்திரம் சனநாயகம் முற்றுப்பெற மாட்டாது.

அது சனநாயகத்தின் ஓர் அடிப்படை அம்சமாக அமைந்த போதிலும் எமது நாட்டில் சனநாயகத்தை பலப்படுத்துவதற்காக கட்டமைப்புக்களின் பலம் பொருந்திய தன்மை அதைப்போலவே சட்டங்களின் பலம்வாய்ந்த தன்மை அவசியமென்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். எனவே நான் முதலில் எமது நாட்டு மக்களுக்கு ஒரு விடயத்தை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இந்நாட்டின் சனநாயகத்திற்காக எனது உச்சளவிலான அர்ப்பணிப்பினை எனது பதவிக்காலத்தில் வெளிக்காட்டுவேன். அதைப்போலவே எமது நாட்டில் தேர்தலொன்றின்போது, அதிகாரப் பரிமாற்றத்தின்போது அது சனநாயக ரீதியாக இடம் பெற்ற வரலாறு நிலவுகிறது.

> “செப்டெம்பர் 21ஆம் திகதியன்று நடைபெற்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டிய தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அனுரகுமார திஸாநாயக்க, பிரதமர நீதியரசர் ஜயந்த ஜெயசூரிய முன்னிலையில்,



தொடர்ச்சி P2

## முதலாவது முஸ்லிம் பெண் அறிவிப்பாளர் காலமானார்



இலங்கை வானொலியில் செய்தி வாசித்த முதல் முஸ்லிம் பெண் செய்தி வாசிப்பாளரும் தொலைக் காட்சியில் செய்திவாசித்த முதல் முஸ்லிம் பெண் அறிவிப்பாளரும் என்ற பெருமை பெற்ற ஆயிஷா ஜுனைதீன் காலமானார். இறக்கும்போது அவருக்கு 72 வயது.

முஸ்லிம் சேவை முதல் பணிப்பாளர் வி ஏ .கபூரின் சிபார்சில் முதன் முதலாக “பிஞ்சு மனம்" சிறுவர் நிகழ்ச்சி நடத்தும் வாய்ப்பு பெற்று, சிலாபம் மாதம்பை பழைய நகரிலிருந்து வானொலிக்குள் பிரவேசித்து, முஸ்லிம் சேவையின் முதல் பெண் தயாரிப்பாளரானார். தொடர்ந்து பகுதி நேர அறிவிப்பாளரானார். இலங்கை வானொலியில் செய்தி வாசித்த முதல் முஸ்லிம் பெண் செய்தி வாசிப்பாளரும் இவரே.

ரூபவாஹினி தொலைக்காட்சி ஆரம்பமான காலத்திலேயே, தொலைக் காட்சியில் செய்திவாசித்த முதல் முஸ்லிம் பெண் அறிவிப்பாளர் என்றபெருமையும் இவருக்குண்டு

ரூபவாஹினியில் ஒளிபரப்பான பல பிரபல நாடகங்களுக்கு இவர் எழுதிய தமிழ் மொழியிலான மொழிபெயர்ப்பே காட்சி படுத்தப்படும். தமிழ் மொழியோடு, ஆங்கிலம், சிங்கள மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர். ஜனாஸா அஸர் தொழுகையின் பின்னர் குப்பியாவத்தை மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# பொறுப்பினை ஈடேற்றுவேன்

ஒருபோதுமே தேர்தலொன்றின்போது இடம்பெறுகின்ற அதிகார பரிமாற்றத்தை எந்தவொரு தலைவரும் நிராகரித்ததில்லை. அதற்கிணங்க செயலாற்றி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களின் மக்கள் ஆணையை சுமுகமாக ஏற்றுக்கொண்டு இந்த சனநாயக ரீதியான அதிகாரப் பரிமாற்றத்திற்கான அவருடைய அர்ப்பணிப்பையும் முன்மாதிரியான தன்மையையும் வெளிக்காட்டியமைக்காக நன்றிக்கூற கடமைப்பட்டுள்ளேன்.

அதைப்போலவே எங்களுக்கு கிடைப்பது சவால்கள் நிறைந்த ஒரு நாடே என்பதை நாங்கள் மிகவும் ஆழமாக விளங்கிக் கொண்டிருக்கிறோம். எமது அரசியலில் இதைவிட பரிசுத்தமாக்கப்படவேண்டிய, மக்கள் பாரியளவில் எதிர்பார்க்கின்ற சாதகமான அரசியல் கலாச்சாரமொன்றின் தேவை நிலவுகிறது. நாங்கள் அதற்காக அர்ப்பணிப்பு செய்யத்தயார்.

எமது நாட்டின் அரசியல்வாதி மற்றும் அரசியல் பற்றி பிரஜைகள் மத்தியில் பாதகமான ஓர் அபிப்பிராயமே நிலவுகிறது. அது பொருத்தமற்ற ஒரு இடமென்ற கருத்தே நிலவுகிறது. எனவே நாங்கள் எமது பக்கத்தில் உச்சளவில் மீண்டும் அரசியல் பற்றியும் அரசியல்வாதி பற்றியும் மக்களின் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துவதற்காக எமது தரப்பில் ஆற்றக்கூடிய பணிகளை ஆற்றத்தயார்.

அத்துடன் எங்களுக்கு கிடைக்கின்ற இந்த ஆழமான நெருக்கடியானது வெறுமனே ஓர் அரசாங்கம் அல்லது அரசியல் கட்சி அல்லது ஒரு தனிநபரால் மாத்திரம் கடந்து செல்லக்கூடிய நிலையில் இருப்பதாக நாங்கள் நம்பவில்லை. ஏனென்றால் இதற்கு முன்னரும் நான் ஒரு மாயாஜால வித்தைக்காரன் அல்லவெனக் கூறியிருக்கிறேன். நான் ஒரு மெஜிக்காரனல்ல. நான் இந்த நாட்டில் பிறந்த ஒரு சாதாரண பிரஜை. ஆற்றல்கள் இருக்கின்றன. ஆற்றாமைகளும் இருக்கின்றன. நாம் அறிந்த விடயங்களும் இருக்கின்றன. அறியாத விடயங்களும் இருக்கின்றன. ஆனால் என்னுடைய முதன்மைப்பணி ஆற்றல்களை உறிஞ்சி எடுத்து அறிந்தவற்றை ஒன்று திரட்டி மிகச் சிறந்த தீர்மானங்களை மேற்கொண்டு இந்த நாட்டை நெறிப்படுத்துவதாகும்.

அதனால் அந்த கூட்டான இடையீட்டின் பங்காளியாவதே என்னுடைய பொறுப்பாகும். அதுபோலவே இந்த நெருக்கடியை நிறைவு செய்யும் போது அனைத்துத் துறைகளையும் சேர்ந்த பொதுப்பிரஜைகளுக்கு ஒரு பாரிய பொறுப்பு இருக்கிறது. அந்தப்பொறுப்பினை ஈடேற்றுவதற்காக நான் உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பினை எதிர்பார்க்கிறேன்.

ஆனால் நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் என்னிடம் ஒரு தலையாய பொறுப்பு இருப்பதாக நான் நம்புவதோடு இந்த சவாலை வென்றெடுப்பதற்காக எல்லாச் சந்தர்ப்பங்களிலும் செயலாற்றுவதற்காக என்னிடம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்பினை நான் முறைப்படி ஈடேற்றுவேன் என்பதை இந்த சமூகத்திற்கு நிரூபித்துக் காட்டுவேன்.

அதைப்போலவே குறிப்பாக எங்களுக்கு தெரியும் எமது நாட்டுக்கு சர்வதேச ஒத்துழைப்பு அவசியமாகும். உலக நாடுகள் மத்தியில் எத்தகைய அதிகாரப்பிளவுகள் இருந்தாலும் நாங்கள் உலகில் தனிமைப்படுத்தப்பட்ட ஒரு நாடாக அமந்துவிட முடியாது. உலகத்துடன் கூட்டாக ஒருங்கிணைந்து பயணிக்கவேண்டும். அதற்கு அவசியமான தீர்மானங்களை மேற்கொள்வதில் நாங்கள் ஒருபோதுமே தயங்கமாட்டோம்.

அதைப்போலவே எமது நாட்டை கட்டியெழுப்புகையில் கைத்தொழில் அதிபர்கள், தொழில் முனைவோர் முக்கியமானவர்களாக கருதப்படுவார்கள். எனவே அவர்களை பலம்பொருந்தியவர்களாக கட்டியெழுப்ப அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி உதவுவார்களென நாங்கள் நம்புகிறோம்.

இறுதியாக நான் கூறிவைக்க விரும்புவது எமது நாட்டின் ஜனநாயகத்தினால் நான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கிறேன். அவ்வாறு தெரிவு செய்துகொள்வதற்காக மக்கள் எனக்கு வாக்களித்திருக்கிறார்கள். எனக்கு அளிக்கப்படாத வாக்குகளும் இருக்கின்றன. எனவே எமது வெற்றியின் உள்ளடக்கம் மற்றும் அளவு பற்றி எமக்கு சிறந்த புரிந்துணர்வு இருக்கின்றது.

எனவே எமக்கு ஒத்துழைப்பு நல்காத, எம்மை நம்பாத பிரஜைகளின் ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்வதும் அவர்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதும் எனது ஆட்சிக்காலத்தில் எனக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்பாக அமைகின்றது. அந்த பணியை சரிவர ஈடேற்ற முடியுமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

எதிர்காலத்தில் இவைனைத்துமே நடைமுறையில் சாத்தியமானதாக அமைகின்ற அனுபவத்தை உங்களால் பெற்றுக்கொள்ள முடியும். அதற்காக உங்களுடைய ஒத்துழைப்பினை பெரிதும் எதிர்பார்க்கிறேன் என்றார்.







# ஜனாதிபதி அனுரவுக்கு ஆசிவேண்டி துஆ பிரார்த்தனை

ஏ.எல்.எம்.ஷினாஸ்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 9வது ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள மேன்மைதங்கிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அவர்களுக்கும் இவரது ஆட்சியின் கீழ் நாட்டில் இன ஐக்கியம், சுபீட்சம் ஏற்பட்டு வளமான நாடு உருவாக வேண்டி ஏற்பாடு செய்த விசேட துஆ பிரார்த்தனை நிகழ்வு திங்கட்கிழமை (23) மாலை சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினரும் கல்முனை தொகுதி அமைப்பாளருமான ஏ.ஆதம்பாவா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விசேட துஆ பிராத்தனையை பள்ளிவாசல் பேஸ் இமாம் அஷ்ஷெய்க் எம்.ஐ.ஆதம்பாவா(றஸாதி) நிகழ்த்தினார்.

# "உங்கள் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு சான்றாகும்"

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட அனுரகுமார திஸாநாயக்க ஆகிய உங்களுக்கு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இம்முறை தாங்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டமை, இந்நாட்டு மக்கள் உங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு சான்றாக இருக்கின்றது.

ஆசியாவின் மிகவும் பழைமை வாய்ந்த ஜனநாயக நாடுகளில் ஒன்றான எமது நாட்டின் மக்கள், தங்களது தலைவரை சுதந்திரமானதும், நியாயமானதுமான ஜனநாயக முறையில் தேர்ந்தெடுத்தது குறிப்பிடத்தக்கது.

தங்களது பதவிக்காலத்தில் அனைத்து குடிமக்களும், ஒற்றுமையாக, பொருளாதார மறுமலர்ச்சியுடன் செழிப்பாக வாழ வேண்டும் என்று அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், இஸ்லாமிய சமய அறிஞர்கள் மற்றும் இலங்கை வாழ் முஸ்லிம்கள் நம்புவதுடன் அதற்காக பிரார்த்தனையும் செய்கின்றோம்.

அன்பு நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்:

"உங்கள் தலைவர்களில் சிறந்தவர்கள், நீங்கள் அவர்களை விரும்பி, அவர்களும் உங்களை விரும்பக் கூடியவராவர்".

அந்தவகையில், உங்கள் தலைமைத்துவத்தின் கீழ் இந்நாட்டில் வாழும் பல்லின மக்களாகிய பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் உள்ளடங்களாக ஏனைய அனைத்து மக்களும் ஒற்றுமையாகவும், சகோதர வாஞ்சையோடும் வாழக்கூடிய முறையில் சட்டமும் நீதியும், நிலை நாட்டப்படும் என்று அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா நம்புகின்றது.

100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, இந்த நாட்டில் இஸ்லாமிய சமய, சமூக பணிகளில் ஈடுபட்டு, இந்த நாட்டு சட்டங்களை முழுமையாக மதித்து, சட்டரீதியாகத் தெரிவு செய்யப்படும் அரசாங்கங்களுக்கு முழுமையான ஒத்துழைப்புக்களையும் வழங்கி வந்திருக்கின்றது.

அத்தோடு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா எமது நாட்டில் சமூக நல்லிணக்கத்தைக் கட்டி எழுப்புவதிலும், தேசப்பற்றோடு கூடிய ஆக்கப்பணிகளிலும், என்றென்றும் அனைவருடனும் கைகோர்த்து நின்றுள்ளது.

எல்லாம் வல்ல இறைவன் எமது நாட்டை ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி வழி நடாத்தக் கூடிய வாய்ப்பையும், தைரியத்தையும் உங்களுக்கும், உங்களோடு பணியாற்றும் அனைவருக்கும் தருவானாக, என்று அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா பிரார்த்திக்கின்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புதிய செயலாளர்கள் நியமனம்

சேனவிரத்ன, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (CID) முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆவார்.

சம்பத் துயகொண்டா, 33 வருடங்களுக்கும் மேலான சேவையை முடித்து 2021 நவம்பர் 26 அன்று இலங்கை விமானப்படையிலிருந்து ஓய்வு பெற்றார்.

1966 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி கொழும்பில் பிறந்த துயகொண்டா, கொழும்பு தர்ஸ்டன் கல்லூரியின் தயாரிப்பாகும்.









# புதிய ஜனாதிபதி தலதா மாளிகையில் வழிபாடு

புதிதாக சத்தியப்பிரமாணம் செய்துகொண் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, வரலாற்று சிறப்புமிக்க தலதா மாளிகையை திங்கட்கிழமை (23) தரிசித்து ஆசி பெற்றார்.

தலதா மாளிகை வளாகத்தை வந்தடைந்த ஜனாதிபதியை தலதா மாளிகையின் தியவடன நிலமே நிலங்க தேல பண்டார சம்பிரதாய முறைப்படி வரவேற்றார்.

பின்னர், தலதா மாளிகையில் சமய வழிபாடுகளில் ஈடுபட்ட ஜனாதிபதிக்கு மகா சங்கத்தினர் செத் பிரித் பாராயணம் செய்து ஆசீர்வதித்தனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க தலதா மாளிகை வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள விசேட பார்வையாளர் புத்தகத்தில் நினைவுக் குறிப்பு ஒன்றையும் ஜனாதிபதி பதிவிட்டார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி. லால் காந்தவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.




# புதிய ஜனாதிபதி அனுரவுக்கு வாழ்த்து

புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒன்பதாவது ஜனாதிபதியான தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவுக்கு, பல நாடுகளைச் சேர்ந்த தலைவர்களும் தங்களுடைய வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

## "இலங்கை சிறப்பிடத்தை பெற்றுள்ளது"



இலங்கையின் புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்காவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

"இந்தியாவின் அண்டை நாட்டுக்கு முன்னுரிமை கொள்கையின் கீழ் இலங்கை சிறப்பு இடத்தைப் பெற்றுள்ளது. எமது மக்கள் மற்றும் முழு பிராந்தியத்தின் நலனுக்காக எமது பன்முக ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த உங்களுடன் நெருக்கமாக பணியாற்ற நான் விரும்புகிறேன்" என்று தனது எக்ஸ் வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

இவருடைய வாழ்த்துக்கு அனுரகுமார திசாநாயக்கவும் நன்றி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## "நட்புறவை முன்னெடுப்பதற்கு ஆர்வமாக உள்ளேன்"



இலங்கையின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அனுரகுமார திசநாயக்கவிற்கு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

சீன அரசாங்கத்தின் சார்பிலும் மக்களின் சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் தனது வாழ்த்து மடலில் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையும் சீனாவும் பாரம்பரிய நட்பு அயல்நாடுகள், இருநாடுகளும் இராஜதந்திர உறவை ஏற்படுத்தி 67 வருடங்களாகின்ற நிலையில், இரு நாடுகளும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வையும், ஆதரவையும் வழங்கி வருகின்றன.

இதன் மூலம் இருநாடுகளும் நட்புறவு மிக்க சகவாழ்வு வெவ்வேறு அளவிலான நாடுகளிடையிலான பரஸ்பரம் நன்மையளிக்கக் கூடிய ஒத்துழைப்பு ஆகியவற்றிற்கான சிறந்த உதாரணங்களாகும்.

நான் இலங்கை சீன உறவுகளுக்கு பெரும் முக்கியத்துவத்தை வழங்குகின்றேன் உங்களுடன் பாரம்பரிய நட்புறவை முன்னெடுப்பதற்கும், பரஸ்பர அரசியல் நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கும் புதிய பட்டுப் பாதை திட்டத்தில் வெற்றிகரமான விடயங்கள் சாதிப்பதற்கும் நான் ஆர்வமாக உள்ளேன் என குறிப்பிட்டுள்ளார்.

## "மக்களைப் பாராட்டுகின்றோம்"



ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற அனுரகுமார திஸாநாயக்கவிற்கு அமெரிக்கா தனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தங்கள் ஜனநாயக உரிமைகளை அமைதியான முறையில் பயன்படுத்தியமைக்காக இலங்கை மக்களைப் பாராட்டுகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

பகிரப்பட்ட முன்னுரிமைகளின் அடிப்படையில் இணைந்து செயற்படத் தயார் எனவும் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

## கேத்ரின் வெஸ்ட்டின் வாழ்த்து



இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அனுரகுமார திசாநாயக்கவுக்கு, ஐக்கிய இராச்சிய பாராளுமன்ற உறுப்பினர் கேத்ரின் வெஸ்ட் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகத் தனது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.







# தேரோட்டம்

■ வி.ரி.சகாதேவராஜா

தேர்தல் களேபரத்திற்கு மத்தியில், வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த தேரோட்ட வைபவம் ஞாயிற்றுக்கிழமை (22) மாலை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

## "இரு நாடுகளின் உறவு வலுப்படும்"



ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அனுரகுமார திசாநாயக்கவை இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா, பத்தரமுல்லையில் உள்ள தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (22) மாலை சந்தித்தார்.

இந்தியாவின் தலைமையிலிருந்து வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், திசாநாயக்கவின் தேர்தல் வெற்றிக்கும் வாழ்த்து தெரிவித்தார், இரு நாடுகளின் செழுமைக்காக உறவுகளை வலுப்படுத்துவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை வலியுறுத்தியதாக, உயர்ஸ்தானிகர் தனது எக்ஸ் வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரால் திசாநாயக்க ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த சந்திப்பு நடைபெற்றது.

# 37 இலட்சம் பேர் வாக்களிக்கவில்லை

நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்ற சுமார் 37 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை. அளிக்கப்பட்ட வாக்குகளில் மூன்று இலட்சத்து 300 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் 17,140,354 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதுடன், 13,619,916 வாக்காளர்கள் வாக்களித்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. பதிவான வாக்குகளில் இது 79.46 சதவீதமாகும்.

ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தாலும் ஒரு கோடியே 36 இலட்சத்து 19 ஆயிரத்து 916 பேரே வாக்களித்திருந்தனர். வாக்குப் பதிவு (79.46 சதவீதம்)

கடந்த ஜனாதிபதித் தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இம்முறை நிராகரிக்கப்பட்ட வாக்கு வீதம் அதிகரித்துள்ளது.

இலங்கையில் 1982 ஒக்டோபர் 20ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது, அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில், 1.22 சதவீத வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.

1988இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் 1.76 சதவீத வாக்குகளும், 1994இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின்போது 1.97 சதவீத வாக்குகளும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

1999இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது, 2.31 சதவீத வாக்குகளும், கடைசியாக 2019இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின்போது, 0.85 சதவீத வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. இம்முறையே நிராகரிக்கப்பட்ட வாக்குகள் 2 சதவீதத்தைக் கடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# கடற்றொழிலுக்கு சென்றவர் சடலமாக மீட்பு

■ பு.கஜிந்தன்



யாழ்ப்பாணத்தில் கடற்றொழிலுக்காகச் சென்றிருந்த நபர் ஒருவர் படகில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அராலி மத்தி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பேரானந்த சிதம்பரம் நாகராஜா (வயது 53) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் ஞாயிற்றுக்கிழமை (23) மாலை அராலியில் இருந்து தனியாகக் கடற்றொழிலுக்குச் சென்றுள்ளார். இவ்வாறு சென்றவர் திங்கட்கிழமை(23) காலைவரை திரும்பாததால், அப்பகுதியினர் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது அவரது சடலம், பொன்னாலை கடலில் படகுடன் கரையொதுங்கி இருந்ததை அவதானித்துள்ளனர்.

சடலத்தின் வாயில் காயம் ஒன்று காணப்படுகிற நிலையில், வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து, சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பெண்ணை தள்ளிவிட்ட இருவர் கைது

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கு எண்ணும் மையமாக அமைக்கப்பட்ட கொழும்பு றோயல் கல்லூரியில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி பெண்ணொருவரை தள்ளிவிட்டுக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டதாக குருந்துவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த பெண் வெள்ளவத்தை காலி வீதியைச் சேர்ந்தவர் எனவும் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குப் பின்னர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை (22) அன்று இடம்பெற்ற இரண்டாவது சுற்று விருப்பு வாக்கு எண்ணிக்கையின் போது, அரசியல் கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து, சந்தேக நபர்கள் குறித்த பெண்ணை தள்ளிவிட்டு அந்த இடத்தில் குழப்பமான நிலையை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஹெவ்லொக் வீதி, மயூரா பிளேஸ், மற்றும் வெள்ளவத்தை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 43,45 வயதுடையவர்கள் என தெரியவந்துள்ளது.

WCIC
Women's Chamber of Industry and Commerce
Engage - Empower - Enrich
In Collaboration with
USAID
FROM THE AMERICAN PEOPLE
WCIC
மேன்மைக்கு கௌரவம்
Women Entrepreneur Awards
வலுவூட்டல் AIA INSURANCE
இலங்கையின் சாதனைமிக்க மகளிர் தொழில்முனைவோரை அழைக்கின்றோம்
இலங்கையின் மகளிர் தொழில்முனைவோருக்கு அழைப்பு!!
தொழில்முனைவோருக்கான ம.தொ.வ.ச பிரதிபாபிஷேக
மகளிர் தொழில்முனைவோர் விருதுகள் 2024
விண்ணப்ப வகைகள்: வணிக விருதுகள் - தொடக்க, மைக்ரோ, சிறிய, நடுத்தர மற்றும் பெரிய.
மாகாண விருதுகள் - ஒவ்வொரு மாகாணத்திலும் சிறந்தவை.
வெற்றிகரமான விண்ணப்பதாரர்கள் டிஜிட்டல் தொழில்முனைவோர், புத்தாக்கமுள்ள தொழில்முனைவோர், சமூக தொழில்முனைவோர், சிறந்த ஸ்டார்ட் அப், மிகச் சிறந்த ஏற்றுமதி சார்ந்த தொழில்முனைவோர், மிகவும் நேர்மறையாகத் திறன் கொண்ட தொழில்முனைவோர் (உற்பத்தி மற்றும் சேவை), இளம் பெண் தொழில்முனைவோர் மற்றும் 2024 ஆம் ஆண்டின் மிக சிறந்த பெண் தொழில்முனைவோர் போன்ற சிறப்பு விருதுகளுக்கு பரிசீலிக்கத் தகுதியுடையவர்கள்.
என்ட்ரி கிட்டினை www.wcicsl.lk தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். பூர்த்தி செய்யப்பட்ட என்ட்ரி கிட்டினை சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் மற்றும் நுழைவுக் கட்டணச் சான்றுடன் WCICக்கு 2024 அக்டோபர் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன் அனுப்ப வேண்டும்.
அனுசரணையாளர்கள்
பிளட்டினம் AIA HEALTHIER, LONGER, BETTER LIVES
டயமன்ட் DFCC Aloka (Banking Partner)
ஒத்துழைப்புப் பங்காளர் USAID
கோல்ட் McLARENS GROUP SUNQUICK
சில்வர் Hayleys
ப்ரோன்ஸ் IMPRA
ஊடக பங்காளர்-அச்சு/சமூக ஊடகம்
THE SUNDAY TIMES DailyMirror DailyFT தமிழ்Mirror
அறிவுசார் பங்காளர் EY Building a better working world
தொடர்பாடல் பங்காளர் triad
மகளிர் தொழில்துறை மற்றும் வர்த்தக சம்மேளனம் இலங்கை
இல.380/110, சரண வீதி, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07, இலங்கை, தொ.பே: 0112671762, மொபைல்: 0766848080

# ‘சிவப்பு வால் நட்சத்திரம்’ பிரகாசத்துடன் ஒளிரவேண்டும்

வெள்ளையர்களிடம் இருந்து 1948இல் சுதந்திரம் பெற்று 76 வருடங்களில் இப்படி ஒரு மாற்றம் நாட்டில் ஏற்பட்டதில்லை. இன்னும் சொல்லப்போனால், நாட்டின் அனைத்து சாதியினரையும் தோற்கடித்து, ஒற்றை “சிவப்பு நட்சத்திரம்” வென்றுள்ளது. இந்த சிவப்பு நட்சத்திரம் விபத்து அல்ல. ‘கொஞ்சமாக’ ‘மெல்ல மெல்ல’ உருவாக்கப்பட்ட மிக பிரகாசமான ஒரு நட்சத்திரமாகும்.

நாடு ‘மாற்றத்தை’ அடையவில்லை, மாறாக ‘வரலாற்று மாற்றத்தை’ ‘உண்மையான மாற்றத்தை’ சந்தித்துள்ளது. இது இலங்கை வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத மாற்றமாகும். இல்லையேல் இலங்கையின் வரலாற்றை முற்றாகப் புரட்டிப்போட்ட மாற்றம் என்றும் கூறலாம்.

எத்தனையோ சோகத்தோடும், கண்ணீரோடும் உருவான இந்த சிவப்பு வால் நட்சத்திரம், பல தசாப்தங்களாக காலில் போட்டு மிதித்தவர்களின் அத்தனை முயற்சிகளையும் முறியடித்து, இன்று ஒரு மாபெரும் வால் நட்சத்திரமாக ஒளிர்கிறது.

எல்லா வகையிலும் சோர்ந்து போன நாட்டின் எதிர்காலம் இனி இருளில் மூழ்காது. இந்த நாட்டின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அனுரகுமார திசாநாயக்க தெரிவு செய்யப்பட்டிருப்பது தற்செயலாக அல்ல, மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

விஜேவீரவின் ஜனதா விமுக்தி பெரமுனா, கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இலங்கை சமசமாஜக் கட்சி போன்ற இலங்கையில் பிறந்த முதல் இடதுசாரி அரசியல் இயக்கங்களில் தனித்து நிற்கிறது, ஏனெனில், அதில் உள்ள பெரும்பாலான செயற்பாட்டாளர்கள் இளைஞர்கள், ஆக்ரோஷம், விடாமுயற்சி மற்றும் அரசியலில் அர்ப்பணிப்புடன் இருந்தனர்.

சிலகாலம் இவ்வாறான அடக்குமுறைகளுக்கும் தடைகளுக்கும் உள்ளாகி மண்ணாகிப் போன அரசியல்

விஜேவீரவின் ஜனதா விமுக்தி பெரமுனா, கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இலங்கை சமசமாஜக் கட்சி போன்ற இலங்கையில் பிறந்த முதல் இடதுசாரி அரசியல் இயக்கங்களில் தனித்து நிற்கிறது, ஏனெனில் அதில் உள்ள பெரும்பாலான செயற்பாட்டாளர்கள் இளைஞர்கள், ஆக்ரோஷம், விடாமுயற்சி மற்றும் அரசியலில் அர்ப்பணிப்புடன் இருந்தனர்.

சிலகாலம் இவ்வாறான அடக்குமுறைகளுக்கும் தடைகளுக்கும் உள்ளாகி மண்ணாகிப் போன அரசியல் இயக்கத்தை அனுரகுமார திஸாநாயக்க வழிநடத்திச் செல்கிறார்.

‘மக்கள் போராட்டத்தை’ ‘ஜனநாயகப் போராட்டமாக’ மாற்றிய அனுர, ஏறத்தாழ 59 வருடங்களின் பின்னர், 9ஆவது ஜனாதிபதித் தேர்தலின் பிரசாரத்தை பொறுப்பேற்று சிவப்பு நட்சத்திரத்தை ஏற்றி, ஒளியேற்றுகிறார்.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் ஒரு வரலாற்றுத் தருணம் குறிப்பதன் மூலம் மட்டுமல்ல, ஐம்பத்தாறு இலட்சம் வாக்காளர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதன் மூலம் அவர் தனது வெற்றியின் பாதையில் பயணிக்கவேண்டும். வரலாற்றில் எந்தவொரு தேர்தலையும் இவ்வாறு கண்காணித்திருக்க முடியாது. பூஜ்ஜிய வன்முறையற்ற தேர்தலாகும்.

பாரம்பரிய இடதுசாரி மற்றும் வலதுசாரி அரசியல் சக்திகளை முற்றிலுமாக தோற்கடித்து, நாட்டை ஒரு புதிய ‘போராட்டத்திற்கு’ கொண்டு செல்லும் இந்த அற்புதமான மனிதனின் பயணத்திற்கும், இந்த அற்புதமான அரசியல் இயக்கத்தின் பயணத்துக்கும் நாட்டை வடிவமைக்கும் மாபெரும் புரட்சிக்கும் அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும். முடியாவிடின் ஓரமாய் ஒதுங்கிநின்று அவதானிக்கவேண்டும். கால்களை மட்டுமே இழுத்துவிட்டுவிடக்கூடாது என்பதே எமது தாழ்மையான வேண்டுகோளாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# மக்கள் ஆணையும் அனுரவின் வெற்றியும்

**மொஹமட் பாதுஷா**

இலங்கையின் அரசியலில் முன்னொருபோதும் இல்லாத அபூர்வம் ஒன்று நடந்திருக்கின்றது. எந்தவிதமான குடும்ப அரசியல் பின்னணியும் இல்லாமல் அரசியலுக்கு வந்த அனுரகுமாரதிசாநாயக்க, இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட 9ஆவது ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார்.

வட மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள அனுராதபுரம் மாவட்டம் தம்புத்தேகம எனும் பகுதியில் பிரதேசத்தில் வறிய குடும்பத்தில் 24.11.1968இல் கூலித் தொழிலாளியின் மகனாக அனுரகுமார திசாநாயக்க பிறந்தார். 1997ஆம் ஆண்டு ஜே.வி.பி. ஊடாக செயற்பாட்டு அரசியலுக்குள் நுழைந்து 2000ஆம் ஆண்டிலிருந்து பாராளுமன்ற உறுப்பினராகவும் இடையில் சில காலம் அமைச்சராகவும் பதவி வகித்த திசாநாயக்க முதியன்ஸலாகே அனுரகுமார திசாநாயக்க இந்தத் தேர்தலில் ஒரு ஜனாதிபதியையும் முன்னாள் ஜனாதிபதியின் புதல்வரையும் தோற்கடித்திருக்கின்றார்.

இந்த வெற்றியை உலகமே வியந்து பார்க்கின்றது. பலரும் கொண்டாடுகின்றனர். இலங்கையில் பல்வேறு விடயப் பரப்புகளில் நல்ல மாற்றத்தை வேண்டி நின்ற மக்களுக்கு இது நல்லதொரு அறிகுறியாகத் தெரிகின்றது.

அனுர ஜனாதிபதியாகி விட்டார் என்பதற்காக, எல்லாம் மாறி விடும், பிரச்சினைகள் உடனே தீர்ந்துவிடும் என்று கூற முடியாது எனினும், இது ஒரு மாற்றத்தின் ஆரம்பமாக அமையும் என்பதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

தபால்மூல வாக்குகள் வெளியாகிய வேளையிலேயே அனுரவின் வெற்றியை ஊகிக்கக் கூடியதாக இருந்த போதிலும், பிறகு ஒரு கட்டத்தில் அனுரவை சஜித் எட்டிப் பிடிப்பாரோ என்று எண்ணுமளவுக்கு பெறுபேறுகள் வெளியாகின. ஆனால், 50 சதவீதத்திற்கு அதிகமான வாக்குகளை யாரும் பெறாமையால் ஏனைய 36 பேரின் விருப்பு வாக்குகளும் எண்ணப்பட்டன.

அதன்படி, இதுவரை தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிகளுள் மிகக் குறைந்த சதவீத (43) வாக்குகளுடன், தன்னோடு போட்டியிட்டு 34 சதவீத வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தை பிடித்த சஜித் பிரேமதாசவை விட 12 இலட்சம் மேலதிக வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளார். இந்த நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்ட ரணில் விக்ரமசிங்க 23. இலட்சம் வாக்குகளைப் பெற்றிருந்த நிலையில், மிக நாகரிகமான முறையில் ஜனாதிபதி பதவியில் இருந்து வெளியேறியிருக்கின்றார்.

யார் என்ன கூறினாலும் ஜே.வி.பிக்கு ஒரு கறை படிந்த வரலாறு இருக்கின்றது. இப்படியான கசப்பான கடந்த கால நிகழ்வுகள் இலங்கையின் எல்லா பெருந் தேசிய அரசியல் கட்சிகளுக்கும் இருக்கின்றன. ஆனால், பழைய புராணங்களை எல்லாம் ஒருபுறம் வைத்து விட்டே மக்கள் இந்த மாற்றத்திற்காக தம்மைத் தயார்ப் படுத்திக் கொண்டனர் எனலாம்.

ஒரு காலத்தில் மூன்றாவது பெரிய அரசியல் கட்சியாகக் கோலோச்சிய ஜே.வி.பி. பின்னர் சரிவைச் சந்தித்தது. எம்.பிக்கள் குறைந்தனர். ஆனால், அனுரகுமார திசாநாயக்க தலைவரான பிறகு அது ஒரு புது வழியில் பயணிக்க ஆரம்பித்தது. அதுதான் இன்று இந்த இடத்திற்கு அழைத்து வந்திருக்கின்றது.

அனுரகுமார திசாநாயக்க ஓர் அமைச்சராக இருந்ததுதான் அவர் இது வரை வகித்த உயர் பதவி. அரசியல் பின்புலமும் இல்லை. பணக்காரரும் இல்லை. ஆனாலும், மக்கள் அதிலும் குறிப்பாகப் பெரும்பான்மையான சிங்கள மக்களும் கணிசமான முஸ்லிம், தமிழ் மக்களும் அவரை நம்பி வாக்களித்திருக்கிறார்கள்.

இந்த நாட்டைப் பொருளாதார வீழ்ச்சி, அரசியல் நெருக்கடியில் இருந்து மீட்டவர் ரணில் விக்ரமசிங்க என்பதை யாரும் மறக்கமுடியாது. அனுர, சஜித் உட்பட பலரும் தயங்கிய நேரத்தில் நாட்டை பொறுப்பேற்று, மீட்டவர் என்றவகையில் இலங்கைச் சரித்திரத்தில் ரணில் நன்றிக்குரியவராக இருப்பார். அப்பேர்ப்பட்ட முதுபெரும் அரசியல் அனுபவம் கொண்ட ரணில் விக்ரமசிங்கவையும் முன்னாள் ஜனாதிபதியின் புதல்வரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித்தையும் விட அதிக வாக்குகள் பெறுவது என்பது சாதாரணமாக நடந்து விடக் கூடிய மாற்றமல்ல என்பது தெளிவு.

இதற்காக திட்டமிட்ட ஒரு பணியை அனுரகுமார தலைமையிலான அணி செய்தது. அனுரகுமார என்ற சாதாரண மக்களாலும் கவரப்படக் கூடிய மனிதர் ஒருவர் இல்லாமல் போயிருந்தால் ஜே.வி.பிக்கு இந்த வெற்றி ஒரு போதும் கிடைத்திருக்காது.

அரகலயவை தோற்றுவித்ததும், அதனால் பயனடைந்ததும் யாராக இருந்தாலும் கூட,பின்னர் ஜே.வி.பி. அதனை நன்கு பயன்படுத்திக் கொண்டது. ஜே.வி.பி. என்ற கட்சியை என்.பி.பி. என்று மாற்றியது மட்டுமன்றி, ஒரு திட்டமிட்ட அரசியல் நகர்வையும் மேற்கொண்டது. இந்நிலையில், இந்தியா உள்ளிட்ட பல நாடுகளின் தூதுவர்கள் அனுரவை சந்திக்கத் தொடங்கியது முக்கியத்திருப்பங்களாகும்.

ஓர் அரசியல்வாதி செய்து காட்டியிருக்க வேண்டும். அவருக்கு அனுபவம் இல்லாமல் எப்படிப் பொறுப்பைக் கொடுக்கலாம் என்ற கேள்விகள் எழுந்தது இயல்பானதே.

ஆனால், ஒரு மக்கள் பிரதிநிதி தொடராகப் பாராளுமன்றத்தில் கச்சிதமான முறையில் உரையாற்றுவதும், மேடைகளில் கூப்பாடு போடாமல் பேச வேண்டிய விடயத்தை மட்டும் தெளிவாகப் பேசுவதும் எந்தளவுக்கு மாற்றத்தைக் கொண்டு வரும் என்பதற்கு புதிய ஜனாதிபதி அனுரவே நல்ல உதாரணமாகும்.

அவர் வெற்றிகரமான ஜனாதிபதியாக இருப்பாரா என்பது ஒரு புறமிருக்க, ஒரு சாதாரண அயல் வீட்டுக்காரரைப் போன்ற தோற்றமும், நேர்த்தியான பேச்சும், வித்தியாசமான அணுகுமுறையும் மக்களைக் கவர்ந்தன. கட்டமைக்கப்பட்ட இயக்கச் செயற்பாடுகளும் நவீன ஊடகப் பிரசாரங்களும்; ‘ரட்ட அனுரட்ட’ என்ற பாடலும் இந்த வெற்றியில் கணிசமான பங்கை வகிக்கின்றன.

ரணிலுக்குப் பின்னால் அமெரிக்காவும். சஜித்திற்கு பின்னால் இந்தியாவும் இருந்தன. இதேவேளை, அனுரகுமாராவின் பின்னால் சீனா இருந்ததாகக் கூறப்பட்டது. இப்போது இந்தியத் தூதுவர் ஓடோடி வந்து வாழ்த்துக் கூறி ‘நாமும் உங்களோடுதான்’ என குறிப்புணர்த்தியதைப் போல இனி மற்ற நாடுகளும் உறவு கொண்டாடும்.

ஆனால், இந்த வெற்றி என்பது வெளிச் சக்திகளால் உருவானதாகக் குறிப்பிடமுடியாது. மாறாக, நமது பாரம்பரிய ஆட்சியாளர்களால் மக்களுக்கு ஏற்பட்டிருந்த மனவெறுப்பு, அனுரவின் தொடரான பேச்சுக்கள் மக்களுக்கு இவருக்கும் ஒருமுறை கொடுத்துப் பார்த்தால் என்ன என்ற கேள்வியை எழுப்பியது. அனுர ஜனாதிபதியானதற்கு இப்படிப் பல காரணங்களைக் கூறலாம்.

அதேநேரம் இத்தனை அனுபவங்களைக் கொண்டிருந்தது மட்டுமன்றி, நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டவருமான ரணில் விக்ரமசிங்க ஒரு குறிப்பிட்ட கட்டம் வரை நம்பிக்கையை கொண்டிருந்தார். 2022ஆம் ஆண்டு பட்ட கஷ்டங்களை நினைத்து மக்கள் கடைசித் தருணத்தில் தமக்கு வாக்களிப்பார்கள் என்று அவர் நினைத்தது நடக்கவில்லை.

ரணில் விக்ரமசிங்க இதற்கு முன்னரான ஜனாதிபதித் தேர்தல்களில் குறைந்தளவான மக்கள் ஆதரவையே பெற்றிருந்தார். இந்தமுறை அந்த ஆதரவு அதிகரிப்பதற்கு அவரது கடந்த இரு வருட ஆளுகையே காரணமெனலாம்.

இருப்பினும், ஐக்கிய தேசியக் கட்சி என்ற கட்சி அப்படியே தூர்ந்து போய் விட்டது. மொட்டு அரசாங்கத்தின் பல ஊழல் வாதிகள், மக்களால் விமர்சிக்கப்பட்ட அரசியல்வாதிகள் ரணிலின் ஆட்சியில் இருந்தனர். இவர்களை வைத்துக் கொண்டு எப்படி மாற்றத்தைக் கொண்டு வருவது என்ற எண்ணம் மக்கள் ஏற்பட்டிருக்கும்.

அதேபோல்,கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் 55 இலட்சம் வாக்குகளைப் பெற்றிருந்தபோதும், இந்த முறை அது குறைந்துள்ளது. 2022ஆம் ஆண்டு நாட்டை அவர் பொறுப்பேற்கவில்லை என்பதும் அவருடனும் ஊழல்வாதிகள் இனவாதிகள் இருக்கின்றமையும் இதில் செல்வாக்குச் செலுத்தியிருக்கும். இவரது வாக்கு வங்கியில் ஒரு பகுதியையே ரணில் தன்வசப்படுத்திக் கொண்டார் எனலாம்.

அத்துடன். இரு முஸ்லிம் கட்சிகளும் சுமந்திரன் அணியும் ஆதரவளித்தமை கணிசமான வாக்குகளை சஜித்திற்கு பெற்றுக் கொடுத்ததை மறுக்க முடியாது. இல்லாவிட்டால் இதைவிட அவர் தோல்வி கண்டிருப்பார். ஆனால், மறுபக்கத்தில் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவு சிங்கள மக்களிடையே பாதகமான கண்ணோட்டத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.

இத்தேர்தலில், தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் பல கூறுகளாகத் துண்டாடப்பட்ட சூழலில், அனுர அணியின் திட்டமிட்ட நடவடிக்கை, பிரசாரங்களால் சிங்கள மக்களின் பெரும்பான்மையான வாக்குகள் கொத்தாகத் திசைக்காட்டிக்குக் கிடைத்ததால் அனுரகுமார ஜனாதிபதியாக வெற்றிவாகை சூடியிருக்கின்றார்.

‘நாடு அனுரவுக்கு’ என்ற கோஷம் நிரூபணமாகி விட்டது. ஆகவே, அவருக்கு வாக்களிக்காமல் விட்ட 56 சதவீத மக்களுக்கும் கூட அவரே ஜனாதிபதி. எனவே, இனி ஜனாதிபதி அனுர நாட்டுக்கு என்ன செய்யப் போகின்றார் என்பதையே குறிப்பாக மூவின மக்களும் எதிர்பார்த்துள்ளனர்.



## வாழ்வியல் தரிசனம்

எம்மவர்களின் பொதுக்கூட்டங்கள் நடைபெறும்போது, அங்கு ஆக்ரோஷமாகப் பேசி, தங்கள் திறமையைக் காட்டிக்கொள்வார்கள். இத்தகைய கூட்டங்களின்போது, அங்குள்ள அங்கத்தினர்கள் தங்களின் பழைய பகைமைகளைக் கூட்டத்தில் காட்டிக்கொள்வதுண்டு.

வருடாந்த பொதுக்கூட்டங்களில் அங்கத்தினரிடையே பதவிகள் தெரிவுசெய்யப்படும். அப்பொழுதுதான் அவர்களின் உண்மை முகம் தெரியவரும்.

நண்பர்களாக இருந்தவர்களிடையே மனஸ்தாபங்கள் வெளிப்படும். சிலர் கோபத்துடன் வெளயேறிவிடுவார்கள். பலர் அங்கு குழுக்களாக இயங்கத் தொடங்கி விடுவார்கள். வீட்டுக்கு வீடு வாசல்படிபோல், ஊருக்கு ஊர் பொதுவாகக் கூட்டங்கள் இப்படித்தான் இப்போது நடைபெறுகின்றன. இத்தகைய கூட்டங்களைப் பார்க்கும் ஊரவர்களுக்குக் கலகலப்பாகத்தான் இருக்கும்.

ஒற்றுமையாகக் கூட்டம் கூடி, செய்ய வேண்டிய கருமங்களை வினைத்திறனுடன் செய்வதை விடுத்து, நீயா, நானா என போட்டியிடுதல், சண்டைக்கு ஆயத்தமாதல், கண்டபடி வார்த்தைகளைப் பிரயோகித்தல் போன்றவை வெட்கப்பட வேண்டியவை.

பதவிகளைக் கேட்டு, அதன் பின்னால் ஓடக்கூடாது. அது தானாக வந்தால்தான், பதவி வகிப்பவருக்கும் கௌரவம், பதவிக்குரிய பொறுப்பும் காரியங்களும் நிறைவேற்றப்படும். வெறும் பவிசுக்காகப் பதவியைப் பெறுபவர்களால் காரியங்கள் சித்தியடைவதில்லை. பொதுநல விடயங்களில் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். அதுவே, நாகரிகமாகும்.

நன்றி – பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### திரும்பி செல்வதில் சிரமம்



நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு, வாக்களிக்க வந்த வாக்காளர்கள் திரும்பிச் செல்ல முடியாது தவித்து வருகின்றனர்.


அந்தவகையில், நுவரெலியா மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்கள் தங்களது வாக்களிப்பை முடித்து விட்டு மீண்டும் தங்களது பணிக்குச் செல்ல முடியாது உள்ளனர்.

ஹட்டன் அரச, தனியார் பேருந்து நிலையத்தில் ஆயிரக்கணக்கான பயணிகள் இவ்வாறு சிரமத்திற்கு உள்ளாகி இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

ஹட்டன் அரச தனியார் பேருந்து நிலையம் அதிகளவில் வெளி மாவட்டங்களுக்குப் பேருந்து சேவையை முன்னெடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

– செ.தி.பெருமாள்

# கலாசார பாரம்பரிய பாதுகாப்பை நினைவூட்டும் சைகை மொழி



**செ.அபிசேகன்,**
**ஊடகக் கற்கைகள் துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**




சைகை மொழி என்பது தெரியப்படுத்தும் தகவலைச் சைகை மூலம் மற்றவருக்கு காட்சிப்படுத்துவது ஆகும். இவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள், கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என இத்தினம் வலியுறுத்துகிறது.

சர்வதேச சைகை மொழிகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் 23 அன்று அனுஷ்டிக்கப்படுகிறது. காது கேளாதவர்கள் மற்றும் சைகை மொழிகளைப் பயன்படுத்துபவர்களின் மொழியியல் அடையாளத்தையும் கலாசார செழுமையையும் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் இந்த நாள் ஒரு சிறப்புச் சந்தர்ப்பத்தை வழங்குகிறது. 2024ஆம் ஆண்டு சைகை மொழி தினக் கொண்டாட்டத்தின் போது, சைகை மொழிகள் கொண்டு வரும் ஒற்றுமையை வலியுறுத்துவதில் கவனம் செலுத்தப்படும்.

உலகில் 7 கோடி பேர் காது கேளாதவர்களாக உள்ளனர். இதில் 80 சதவீதம் பேர் வளரும் நாடுகளில் உள்ளனர். இவர்களிடம் 300 விதமான சைகை மொழிகள் பயன்பாட்டில் உள்ளன.

1951ஆம் ஆண்டு செப்டெம்பர் 23இல் உலக காது கேளாதோர் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்நாளை அங்கீகரிக்கும் விதமாக இந்நாளே சர்வதேச சைகை மொழி தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

A/RES/72/161 என்ற தீர்மானம் ஆன்டிகுவா மற்றும் பார்புடாவின் நிரந்தர தூதரகத்தால் ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் 97 உறுப்பு நாடுகளின் ஆதரவைப் பெற்றது. இது டிசெம்பர் 19, 2017 அன்று ஒருமித்த கருத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சைகை மொழிகளின் சர்வதேச தினத்தின் முக்கியத்துவம் பற்றிப் பார்க்கின்ற போது, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை செப்டெம்பர் 23ஆம் திகதியைச் சர்வதேச சைகை மொழிகள் தினமாக அதிகாரப்பூர்வமாக நியமித்துள்ளது. இந்த நினைவு நாள், காது கேளாத நபர்களின் மனித உரிமைகளை முழுமையாக உணர்ந்து கொள்வதை உறுதி செய்வதில் சைகை மொழியின் முக்கிய பங்கு பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

> **உலகெங்கிலும் உள்ள காது கேளாத சமூகங்கள், அரசாங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் தங்கள் நாடுகளின் பல்வேறு மொழியியல் நிலப்பரப்புகளின் ஒருங்கிணைந்த கூறுகளாகத் தேசிய சைகை மொழிகளை ஊக்குவிக்கவும் அங்கீகரிக்கவும் தொடர்ந்து இணைந்து செயல்படும். இந்த நாள் தகவல்தொடர்பு வசதி, உள்ளடக்கத்தை வளர்ப்பது மற்றும் காது கேளாத சமூகங்களின் தனித்துவமான கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் சைகை மொழிகளின் முக்கியத்துவத்தை நினைவூட்டுகிறது**

இன்றைய நிலைவரப்படி, 2024ஆம் ஆண்டுக்கான சர்வதேச சைகை மொழிகள் தினத்திற்கான தீம் இன்னும் அறிவிக்கப்படவில்லை. 2023ஆம் ஆண்டின் சர்வதேச சைகை மொழிகள் தினத்தின் கருப்பொருளாக ' காது கேளாதவர்கள் எங்கும் கையெழுத்திடக்கூடிய உலகம்'

உலகெங்கிலும் உள்ள காது கேளாத சமூகங்கள், அரசாங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் தங்கள் நாடுகளின் பல்வேறு மொழியியல் நிலப்பரப்புகளின் ஒருங்கிணைந்த கூறுகளாகத் தேசிய சைகை மொழிகளை ஊக்குவிக்கவும் அங்கீகரிக்கவும் தொடர்ந்து இணைந்து செயல்படும். இந்த நாள் தகவல்தொடர்பு வசதி, உள்ளடக்கத்தை வளர்ப்பது மற்றும் காது கேளாத சமூகங்களின் தனித்துவமான கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் சைகை மொழிகளின் முக்கியத்துவத்தை நினைவூட்டுகிறது.

சைகை மொழிகள் இயற்கையான மொழிகள்,

> **மாற்றுத் திறனாளிகள் மீதான கருணை, இரக்கம் போன்றவைகளுக்கு பதிலாக அவர்களுக்கு பொதுச் சமூகத்தில் இயல்பாக இயங்கும் வசதிகளை அமைத்துத் தருவதே சரியான முடிவாகும். இதனையே சர்வதேச காது கேளாதோர் கூட்டமைப்பும் வலியுறுத்துகிறது. இது “நாம் இல்லாமல் நம்மைப் பற்றி ஏதுவும் இல்லை” என்ற கொள்கையை ஏடுத்துக்காட்டுகிறது.**

காது கேளாதவர்கள் தொடர்பு கொள்வதற்குப் பயன்படுத்துகிறார்கள். உலகம் முழுவதும் 300க்கும் மேற்பட்ட வெவ்வேறு சைகை மொழிகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு சைகை மொழிக்கும் அதன் தனித்துவமான இலக்கணம் மற்றும் தொடரியல் உள்ளது. பேசும் மொழிகளைப் போலவே சைகை மொழிகளும் முக்கியமானது. அவர்கள் மதிக்கப்பட வேண்டும், காது கேளாதவர்கள் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சுகாதாரம் உட்பட அவர்களின் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் தங்கள் சைகை மொழியைப் பயன்படுத்த உரிமை உண்டு.

இந்த தீர்மானம் சைகை மொழி மற்றும் தொடர்புடைய சேவைகளுக்கான ஆரம்ப அணுகலின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. காது கேளாத நபர்களின் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் இத்தகைய அணுகல் அவசியம் என்று கருதப்படுகிறது. சர்வதேச அளவில் ஒப்புக் கொள்ளப்பட்ட வளர்ச்சி இலக்குகளை அடைவதில் இது முக்கியப் பங்கு வகிக்கிறது. மொழியியல் மற்றும் கலாச்சார பன்முகத்தன்மையின் ஒருங்கிணைந்த கூறுகளாகச் சைகை மொழிகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் தீர்மானம் வலியுறுத்துகிறது.

சைகை மொழிகள் பேச்சு மொழிகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டவையாகும். உலக அளவில் பின்பற்றப்படும் ஒரு சர்வதேச சைகை மொழியும் புழக்கத்தில் உள்ளது, இது காது கேளாதவர்களால் சர்வதேச கூட்டங்களில் மற்றும் முறைசாரா முறையில் பயணம் செய்யும் போது, மற்றும் பழகும்போது பயன்படுத்தப்படுகிறது. இது சைகை மொழியின் பிட்ஜின் வடிவமாகக் கருதப்படுகிறது. இந்த சர்வதேச பொதுவான சைகை மொழி மிகவும் எளிமையான வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

உலக அளவில் பல வளர்ந்து வரும் நாடுகளிலும், மாற்றுத் திறனாளிகள் இயல்பாக இயங்கும் வகையிலான எந்த வித ஏற்பாடுகளும் இல்லை. மாற்றாக எந்த வித குறைபாடும் இல்லையெனில், மட்டுமே இந்த சமுதாயத்தில் இயல்பான வாழ்க்கையைக் கடைப்பிடிக்க முடியும் நிலை உருவாகியுள்ளது. இந்தியா போன்ற நாடுகளிலும், நகரங்களைத் தாண்டி மற்ற பகுதிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற சூழ்நிலை நிலவுவதில்லை. அவர்கள் மீதான கருணை, இரக்கம் போன்றவைகளுக்கு பதிலாக அவர்களுக்கு பொதுச் சமூகத்தில் இயல்பாக இயங்கும் வசதிகளை அமைத்துத் தருவதே சரியான முடிவாகும். இதனையே சர்வதேச காது கேளாதோர் கூட்டமைப்பும் வலியுறுத்துகிறது.

இது “நாம் இல்லாமல் நம்மைப் பற்றி எதுவும் இல்லை” என்ற கொள்கையை எடுத்துக்காட்டுகிறது. காது கேளாதோர் சமூகங்களை அவர்கள் தொடர்பான முடிவெடுக்கும் செயல்முறைகள் மற்றும் முன்முயற்சிகளில் தீவிரமாக ஈடுபடுத்த வேண்டியதன் அவசியத்தை இது வலியுறுத்துகிறது.




# 'வாழை'

## (திரை விமர்சனம்)

**திருச்செல்வம் ஜனனீ,**
**ஊடகக் கற்கைகள் துறை,**
**மூன்றாம் வருடம்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

இந்திய தமிழ் சினிமாவில் சிறந்த இயக்குநராக வளர்ந்து வருபவர் மாரி செல்வராஜ். இவரது திரைப்படங்கள் பெரும்பாலும் கிராமப்புறத்தினை அடிப்படையாகவும் வித்தியாசமான கதைக்களத்தினை அடிப்படையாகக் கொண்டவை. பரியேறும்பெருமாள், கர்ணன் மற்றும் மாமன்னன் படங்களைத் தொடர்ந்து நான்காவது படமான 'வாழை' அவரது தயாரிப்பில் சந்தோஷ் நாராயணன் இசையமைப்பில் கலையரசன், பொன்வேல், நிகிலா விமல், திவ்யா துரைசாமி, பிரியங்கா போன்றோரின் நடிப்பில் ஆகஸ்ட் 23ஆம் திகதி அன்று வெளியானது. இந்த திரைப்படமானது அவரது வாழ்க்கையில் நடந்த உண்மை சம்பவத்தை அடிப்படையாகக் இப்படம் எடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

1999இல் நடக்கும் கதை இது, கதையின் நாயகன் சிவனைந்தான் தனது அம்மா மற்றும் அக்காவுடன் புளியங்குளத்தில் வாழ்ந்து வருகிறார். என்னதான் சேட்டைகள் செய்தாலும் படிப்பில் கெட்டிக்காரன், தனது வகுப்பிலேயே அதிக மதிப்பெண் எடுத்து முதல் மாணவனாக இருக்கிறார்.வங்கிக் கடனை அடைப்பதற்காகப் பள்ளி விடுமுறை நாட்களில் தனது தாயின் வற்புறுத்தலினால் வாழைத்தார் சுமக்கும் தொழிலுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார் சிவனைணாதான். ஆனால், சிவனைணாதானுக்கு இதைச் செய்ய விருப்பமில்லை.மறுபுறம் குறைவான சம்பளத்திற்கு வேலை வாங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், சம்பள உயர்வு கேட்டு கலையரசன் தலைமையில் அந்த ஊர்க்காரர்கள் போராட்டம் நடத்துகின்றனர். ஒரு கட்டத்தில் வேறு வழியின்றி சம்பள உயர்வுக்கு ஒப்புக் கொள்கிறார் முதலாளி.படத்தின் முற்பகுதி இவ்வாறு செல்கிறது.

புடத்தின் இரண்டாம் பகுதியும் கதைநகர்வு மெதுவாகச் சென்றாலும் எதிர்பார்க்க ஏற்றுக்கொள் முடியாத மனநிலையைத் தருகிறது. பாடசாலையில் நடைபெறும் ஆண்டு விழாவில் நிகழ்த்தவிருக்கும் கலை நிகழ்வுக்கு சிவனைந்தான் தெரிவு செய்யப்படுகிறார். அவன் நடன பயிற்சி பெறுவதற்காக விடுமுறை தினத்தில் பாடசாலைக்கு வருமாறு ஆசிரியை பூங்கொடி ரீச்சர் கூறியிருப்பார் ஆனால் வழமைபோல் வாழைத்தார் சுமக்கச் செல்கிறான். அவருடைய சகோதரி வேம்பு மற்றும் கனி ஆகியோரின் உதவியுடன் தனது தாய்க்குத் தெரியாமல் பாடசாலைக்குச் செல்கிறான்.

நடனப் பயிற்சி எல்லாம் முடித்து விட்டு பொன் வேல் அதன் பிறகு மதிய உணவிற்காக வாழைக் கொல்லை ஒன்றில் புகுந்து பழுத்த வாழைத்தாரிலிருந்து வாழைப்பழத்தைப் பறித்துச் சாப்பிடும் போது, தோட்டக்காரர் அவரை தாக்கி, தண்டனை தருகிறார். அதிலிருந்து தப்பி, பசியின் காரணமாக வீட்டுக்கு வருகிறார்.

தாயார் வேலைக்குப் போகவில்லையா? என கேட்க அவன் பதில் சொல்ல இதனால் ஆத்திரமடையும் அவனது அம்மா அவனை அடிப்பதற்காகத் துரத்த அவன் ஓடி, ஊரின் ஒதுக்குப்புறத்தில் இருக்கும் குட்டையில் இறங்கி அந்த நீரை அருந்திப் பசியாற்றிக் கொண்டு அங்கேயே உறங்கி விடுகிறான்.

அழுகுரல் கேட்டு உறக்கம் கலைந்து அவன் பார்க்கும் போது, காவல்துறை அரசு அதிகாரிகள்-ஊர் மக்கள் என ஏராளமானவர்கள் கூட்டமாக திரண்டு இருக்க அதற்கான காரணம் என்ன என்பதைஉணர்வுபூர்வமாக விவரிப்பது தான் இப்படத்தின் மீதிக்கதை.

### சிவனைந்தான் (பொன்வேல்)

நன்றாக படிக்கின்ற மாணவன் குடும்ப சூழ்நிலையின் காரணமாக தனக்கு விருப்பமில்லை என்றாலும், தாயுடன் வாழைத்தாறை சுமப்பதற்கு செல்வார் நண்பனான சேகருடன் நட்பு மற்றும் பூங்கொடி ரீச்சர் மீது இனம் புரியாத அன்பு இதன் காரணமாக அதனை வெளிப்படுத்துவதற்காக அவரின் கைக்குட்டையினை எடுத்து ஒழித்து வைப்பதும் அவரது பெயரிலே (பூங்கொடி) சினிமாபாடல்களை பாடுவது அவர் ஒரு டெயிலர் என்பதால் பாடசாலை சீருடையைக் கிழித்து விட்டு ரீச்சர் வீட்டுக்குச் சென்று தைப்பதற்கு அதற்குக் காணிக்கையாக அவருக்கு மருதாணி இலைகளைப் பறித்துக் கொடுப்பது போன்ற காட்சிகள் மிகவும் சுவாரஸ்யமாக உள்ளது.

### சேகர் (ராகுல்)

சிவனைந்தான் மீது அன்பு அக்கறையும் கொண்டவன். அவனுக்காக குறும்பு செயல்களை செய்பவன். அதற்காக திட்டுக்களும் பேச்சுக்களும் வாங்குபவன்

### பூங்கொடி ரீச்சர் (நிகிலா விமல்)

சிவனைந்நாதன் மற்றும் சேகரின் சேட்டைகளை விளையாட்டுகளைத் தெரிந்தும் அவர்கள் மீது கோபப்படாமல் அவர்களிடம் அன்பு காட்டுவது அவர்களினை வீட்டுக்கு அழைத்துச் செல்வது என்று அவரது கதாபாத்திரம் மிகவும் எதார்த்தமான நடிப்பினை வெளிக்காட்டிள்ளது.

### கனி (கலையரசன்)

கிராமத்தின் ஒரு இளைஞனாகத் தோற்றம் பெறுகின்றார் வாழ்க்கையில் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் இருக்கும் மக்களின் தொழிலுக்குச் சம்பளத்தைக் கூட்டிக் கொடுப்பதற்குப் போராடு தன்மை மற்றும் தப்பு நடந்தால் தட்டிக் கேட்கும் மனோபாவம் வாழைத்தாரை அறுக்கும் நபராக இருந்தபோதிலும், அந்த வேலையிலிருந்து விலக்கப்பட்டு எந்த விதமான கவலையும் இல்லாமல் வாழைத்தாரைத் தலையில் சுமக்கச் செல்கின்றார் இது அவரது கதாபாத்திரத்தின் சிறந்த குணபியல்பை வெளிப்படுத்துகிறது.

### தாய் (ஜனாகி)

ஒரு தாயாக தன் பிள்ளைகள் தான் இவ்வுலகில் இல்லாவிட்டாலும் தனது பிள்ளைகள் தனித்து வாழ வேண்டும் என்பதற்காக நன்றாகப் படிக்கும் பிள்ளை என்றாலும் மனதினை கல்லாக்கிக் கொண்டு அவனைப் பேசிப்பேசி வாழைத்தாரைச் சுமக்க அழைத்துச் செல்வது. தனது மகளை எப்படியாவது கரை சேர்த்து விட வேண்டும் என்ற பரிதவிப்பு .மற்றும் இறுதியில் தனது மகனுக்கு ஒருவேளை வசித்து சோறு போட முடியவில்லை என கதறும் நிலை பார்ப்பவரின் நெஞ்சை உலுக்குக்கிறது

### வேம்பு (திவ்யா துரைசாமி)

அச்அசலாக கிராமத்துப் பெண்ணாக குடும்ப கஷ்டத்தின் நிமித்தம் வேலைக்குத் தாயுடன் செல்லுவது தம்பியுடனான பாசம் அவனுக்கு ஆறுதல் கூறுவது கனியுடனான காதல் சொந்த தம்பி போல சேகரினை பார்ப்பது போன்ற இயல்பினைக் இக்கதாபாத்திரம் கொண்டிருக்கிறது.

சந்தோஷ் நாராயணனின் இசையில் பாடல்களும் பின்னணி இசையும் காட்சிகளுக்கு ஏற்றால் போல் அமைந்தமை படத்திற்கு மிகப்பெரிய பிளஸ் ஆக அமைந்துள்ளது. இவரின் இசையே படத்திற்கு மிகப்பெரிய பக்கபலமாக அமைந்திருக்கிறது. தேனி ஈஸ்வர் ஒளிப்பதிவில் வாழைத் தோப்பு மற்றும் கிராமம் சம்பந்தப்பட்ட காட்சிகள் மற்றும் பள்ளி சம்பந்தப்பட்ட காட்சிகள் என அனைத்துமே மிக மிகச் சிறப்பாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு காட்சிக்கும் இவர்களது உழைப்பு என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

தனது வாழ்வில் நடந்த வலி மிகுந்த ஒரு சம்பவத்தை மிகவும் ரசிக்கும்படியும் ஜனரஞ்சகமாகவும் கலகலப்பாகக் கொடுத்த இயக்குநர் மாரி செல்வராஜ் படத்தில் பல்வேறு திருப்பங்கள் இன்றி மிகவும் யதார்த்த சினிமாவாக இப்படத்தைக் கொடுத்து இருக்கிறார். ஒட்டுமொத்தமாக வாழை திரைப்படமானது சாதாரண கதைக்களத்தை கொண்டமைந்தாலும், இறுதி முடிவானது யாராலும் ஊகிக்க முடியாத பார்வையாளர்களின் நெஞ்சை பதறவைக்கிறது.

















# எளிமையான பதவிப்பிரமாணம்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட 9ஆவது ஜனாதிபதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட அனுரகுமார திசாநாயக்க, ஜனாதிபதி செயலகத்தில், திங்கட்கிழமை (23) பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். இந்த பதவிப்பிரமாண வைபவம், மிகவும் எளிமையான முறையில் இடம்பெற்றது.





# மன்னாரில் வெற்றிக்கொண்டாட்டம்

**எஸ்.ஆர்.லெம்பெட்**

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அனுரகுமார திசாநாயக்க தெரிவு செய்யப்பட்டு. பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில், ஜனாதிபதி செயலகத்தில் திங்கட்கிழமை (23) பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இந்நிலையில், மன்னார் பஜார் பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் மன்னார் மாவட்ட கிளையினால் வெற்றி கொண்டாட்ட நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.







வொஷிங்டன்

# “இதுவே எனது கடைசி தேர்தல்”



“2024 அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தோற்று விட்டால் இதுவே என் கடைசி தேர்தல்” என டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. கமலா ஹாரிஸ், டிரம்ப் இடையே கடுமையான போட்டி நிலவி வருகிறது. நாடு தழுவிய கருத்துக் கணிப்புகளில் கமலா ஹாரிஸ் முன்னிலை பெறத் தொடங்கியிருந்தாலும், டிரம்ப் ஆளும் ஜனநாயக கட்சி மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான டொனால்ட் ட்ரம்ப் செய்தியாளர் ஒருவருக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவரிடம், “நீங்கள் தேர்தலில் மீண்டும் போட்டியிடுவீர்களா?” என கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த ட்ரம்ப், “2024இல் வெள்ளை மாளிகைக்குத் திரும்பும் முயற்சியில் தோல்வி அடைந்தால் 2028இல் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவது இல்லை” என்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

ஒஸ்லோ

## ‘பேஜர்’ சர்ச்சையில் சிக்கிய இந்தியர் மாயம்



லெபனானில், ஹிஸ்புல்லா பயங்கரவாதிகள் பயன்படுத்திய, ‘பேஜர்’ சாதனத்தைத் தயாரித்த நிறுவனம், கேரளாவைச் சேர்ந்தவருக்குச் சொந்தமானது என்று கூறப்படுகிறது.

இந்நிலையில், அவர் குடும்பத்துடன் மாயமாகி உள்ளது குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேற்காசிய நாடான இஸ்ரேலுக்கும், ஹமாஸ் அமைப்புக்கும் இடையே போர் நடந்து வருகிறது.

லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பினரைக் குறிவைத்து சமீபத்தில் மின்னணு தாக்குதல் நடந்தது. இதில், பயங்கரவாதிகள் பயன்படுத்தும், பேஜர் எனப்படும் தகவல் தொடர்பு சாதனம், வாக்கி - டாக்கி ஆகியவை வெடித்துச் சிதறின. இதில், 12 பேர் கொல்லப்பட்டனர். ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இது தொடர்பான விசாரணையில், இந்த பேஜர்கள் தயாரிப்பில், ‘நார்ட் குளோபல்’ நிறுவனத்தின் உரிமையாளர் ரின்சன் ஜோஸ் என்பவருக்குத் தொடர்பு உள்ளமையும், அவர் நோர்வே குடியுரிமை பெற்றவர் என்பதும் தெரியவந்தது.


மேலும், இவர், கேரள மாநிலம் வயநாட்டைச் சேர்ந்தவர் என்பதும், சில ஆண்டுகளுக்கு முன் நோர்வே சென்ற அவர், அங்கு குடியுரிமை பெற்று வாழ்ந்து வருவதும் தெரியவந்தது.

இதற்கிடையே, 37 வயதாகும் ரின்சன் ஜோஸ், கடந்த சில நாட்களாக எங்கிருக்கிறார் என்பது தெரியவில்லை. அவருடைய மனைவியுடனும் தொடர்பு கொள்ள உறவினர்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்குப் பலன் கிடைக்கவில்லை. இதனால், அவர்களுடைய நிலைமை குறித்த அச்சம் எழுந்துள்ளது.

கத்மண்டு

‘யோகா மூலம் ஆன்மிக சுற்றுலா’

## நேபாளத்தின் புதிய முயற்சி



ஆன்மிக சுற்றுலாவுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், மெகா யோகா நிகழ்ச்சி நடத்த நேபாள சுற்றுலாத்துறை, அந்நாட்டு ஹோட்டல் உரிமையாளர் சங்கத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இது குறித்து நேபாள ஹோட்டல் அசோசியேஷன் நிர்வாகிகள் தெரிவித்துள்ளதாவது: “ஆன்மிக சுற்றுலாவை மேம்படுத்தும் முயற்சியாக, வரும் அக்டோபர் மாதம் 16ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை மெகா யோகா நிகழ்ச்சி நடத்த உள்ளோம். உலகெங்கிலும் உள்ள 100க்கும் மேற்பட்ட யோகா ஆர்வலர்கள் கலந்து கொண்டு கருத்தியல் மற்றும் நேரடியாகப் பயிற்சி அளிக்க உள்ளனர்” என்று அவர்கள் தெரிவித்தனர்.

நேபாள ஹோட்டல் அசோசியேஷன் தலைவர் பினாய் க்ஷா கூறுகையில், “இந்த நிகழ்ச்சியின் மூலம் நேபாளம் உலகப் பயணச் சந்தையில் விருப்பமான யோகா மற்றும் ஆன்மிக தலங்களில் ஒன்றாகத் தன்னை நிலைநிறுத்த விரும்புகிறது. ஆன்மிகச் சுற்றுலாவை மேம்படுத்த ஆண்டுதோறும் இத்திருவிழா நடத்தப்படும்” என்று தெரிவித்தார்.

பாக்பத்

பாலியல் வன்கொடுமையில் இருந்து

## சிறுமியை காப்பாற்றிய குரங்கு கூட்டம்



பாலியல் வன்கொடுமை செய்ய முயன்ற நபரை தாக்கி, அவரிடமிருந்து 6 வயது சிறுமியை குரங்கு கூட்டம் ஒன்று காப்பாற்றியுள்ளது.

உத்தரப் பிரதேசத்தின் பாக்பத் மாவட்டத்தில் 6 வயது சிறுமி தனது வீட்டின் முன் விளையாடிக் கொண்டிருந்துள்ளார். அப்போது அந்த வழியாக சென்ற நபர், சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்வதற்காக காட்டில் உள்ள பழைய வீட்டிற்கு இழுத்து சென்றுள்ளார்.

அழுகை சத்தம் கேட்டு வந்த குரங்குகள், அந்த நபரை ஆக்ரோஷமாக தாக்கியுள்ளன.

இதனால் அந்த நபர் சிறுமியை விட்டு விட்டு அங்கிருந்து ஓடியுள்ளார். அங்கிருந்து தப்பிய சிறுமி வீட்டிற்கு வந்து, பெற்றோரிடம் நடந்ததை கூறியுள்ளார். அதைத் தொடர்ந்து இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்ட நிலையில் அந்த அடையாளம் தெரியாத நபர் மீது போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு சிசிடிவி காட்சிகளை அடிப்படையாக கொண்டு விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த சம்பவம் பலரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியுள்ளது.

இதுகுறித்து சிறுமியின் தந்தை கூறுகையில், “சி.சி.ரி.வி. காட்சிகளில் அந்த நபர், எனது மகளுடன் ஒரு குறுகிய பாதையில் நடந்து செல்வதைக் காண முடிந்தது. அந்நபர் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. எனது மகளை கொன்று விடுவதாக மிரட்டியுள்ளார். குரங்குகள் இல்லாமல் இருந்திருந்தால் என் மகள் இந்நேரம் இறந்து போயிருப்பாள்” என தெரிவித்தார்.

ஹைதராபாத்

## நடிகர் சிரஞ்சீவி கின்னஸ் சாதனை



தெலுங்கு நடிகர் சிரஞ்சீவிக்கு, கின்னஸ் விருது வழங்கப்பட்டுள்ளது.

ஹைதராபாத்தில் கடந்த 22ஆம் திகதி நடந்த கின்னஸ் உலக சாதனை விருது நிகழ்ச்சியில், 45 வருடங்களுக்கு மேலாக திரையுலகில் பயணித்து 156 படங்களில் நடித்து 537 பாடல்களுக்கு 24 ஆயிரம் வித்தியாசமான நடன அசைவுகளை ஆடியிருப்பதாக அவரை கௌரவித்து இந்த கின்னஸ் விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதினை பொலிவுட் நடிகர் அமீர் கான் கொடுக்க சிரஞ்சீவி பெற்றுக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து கின்னஸ் சாதனை பெற்ற சிரஞ்சீவியை, தெலுங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி, ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு ஆகியோர் தங்களது எக்ஸ் பக்கத்தில் வாழ்த்தினர்.

மேலும் இரசிகர்கள், திரை பிரபலங்கள் உள்ளிட்ட பலரும் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

நியூசிலாந்துக்கெதிரான

# முதலாவது டெஸ்டில் இலங்கை வென்றது



நியூசிலாந்துக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், காலியில் புதன்கிழமை (18) ஆரம்பித்து திங்கட்கிழமை(23) முடிவுக்கு வந்த முதலாவது போட்டியில் இலங்கை வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 305/10 (துடுப்பாட்டம்: கமிந்து மெண்டிஸ் 114, குசல் மெண்டிஸ் 50, அஞ்சலோ மத்தியூஸ் 36, தினேஷ் சந்திமால் 30 ஓட்டங்கள். பந்துவீச்சு: வில்லியம் ஓ’ருர்க் 5/55, கிளென் பிலிப்ஸ் 2/52, அஜாஸ் பட்டேல் 2/60, டிம் சௌதி 1/48)

நியூசிலாந்து: 340/10 (துடுப்பாட்டம்: டொம் லேதம் 70, டரைல் மிற்செல் 57, கேன் வில்லியம்சன் 55, கிளென் பிலிப்ஸ் ஆ.இ 49, றஷின் றவீந்திர 39, டொம் பிளென்டல் 25 ஓட்டங்கள். பந்துவீச்சு:பிரபாத் ஜெயசூரிய 4/136, ரமேஷ் மென்டிஸ் 3/101, தனஞ்சய டி சில்வா 2/31)

இலங்கை: 309/10 (துடுப்பாட்டம்: திமுத் கருணாரத்ன 83, தினேஷ் சந்திமால் 61, அஞ்சலோ மத்தியூஸ் 50, தனஞ்சய டி சில்வா 40 ஓட்டங்கள். பந்துவீச்சு: அஜாஸ் பட்டேல் 6/90, வில்லியம் ஓ’ருர்க் 3/49, மிற்செல் சான்ட்னெர் 1/51)

நியூசிலாந்து: 211/10 (வெ.இ: 275 ஓட்டங்கள்) (துடுப்பாட்டம்: றஷின் றவீந்திர 92, டொம் பிளென்டல் 30, கேன் வில்லியம்சன் 30, டொம் லேதம் 28 ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரபாத் ஜெயசூரிய 5/68, ரமேஷ் மென்டிஸ் 3/83, அசித பெர்ணாண்டோ 1/5, தனஞ்சய டி சில்வா 1/32)

போட்டியின் நாயகன்: பிரபாத் ஜெயசூரிய

களுதாவளை தேசிய பாடசாலை

## 12 தங்கம் வென்று சாதனை




அஸ்ஹர் இப்றாஹீம்

கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டியில் களுதாவளை மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) 12 முதலிடங்கள் உள்ளடங்கலாக 26 முதல் மூன்றுக்குள்ளான இடங்களைப் பெற்று ஆறு புதிய கிழக்கு மாகாண சாதனையுடன் 31 மாணவர் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் 5 இரண்டாமிடங்களையும் 9 மூன்றாமிடங்களைப் பெற்று 95 புள்ளிகளுடன் கிழக்கு மாகாணத்தில் அதிக முதலிடங்களையும், அதிக புள்ளிகளையும் பெற்றுக் கொண்ட பாடசாலையாக களுதாவளை பாடசாலை சாதித்துள்ளது.

குறிப்பாக ஆண்கள் பிரிவில் 51 புள்ளிகளையும், பெண்கள் பிரிவில் 44 புள்ளிகளையும் களுதாவளை பாடசாலை பெற்றுக்கொண்டது.

மூன்றாவது போட்டியில்

## ஆப்கானிஸ்தானை வீழ்த்தியது தென்னாபிரிக்கா



ஆப்கானிஸ்தானுக்கெதிரான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் தென்னாபிரிக்கா வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் வென்று தொடரை ஏற்கெனவே ஆப்கானிஸ்தான் கைப்பற்றிய நிலையில், ஷார்ஜாவில் ஞாயிற்றுக்கிழமை (22) நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தானின் அணித்தலைவர் ஹஷ்மதுல்லாஹ் ஷகிடி தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான், லுங்கி என்கிடி (2), நக்பயொம்ஸி பீற்றர் (2), பிஜோன் போர்ச்சுன், அன்டிலி பெக்லுவாயோவிடம் (2) விக்கெட்டுகளை இழந்த நிலையில் ரஹ்மனுல்லாஹ் குர்பாஸின் 89 (94), ஏ.எம். கஹஸன்ஃபாரின் ஆட்டமிழக்காத 31 (15) ஓட்டங்களோடு 34 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 169 ஓட்டங்களையே பெற்றது.

பதிலுக்கு 170 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, ஏய்டன் மார்க்ரமின் ஆட்டமிழக்காத 69 (67) ஓட்டங்களோடு 33 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில், வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், பரீட் அஹ்மட், மொஹமட் நபி, கஹஸன்ஃபார் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் குர்பாஸ் தெரிவானார்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## சமநிலையில் ஆர்சனல் சிற்றி போட்டி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (22) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் சமப்படுத்தியது.

ஆர்சனல் சார்பாக றிக்கார்டோ கலபியோரி, கப்ரியல் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். சிற்றி சார்பாக, எர்லிங் ஹலான்ட், ஜோன் ஸ்டோன்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 24, செப்டெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.